சிறப்பு ஆணையர் அலுவலகம்
12 MAY 2014
சென்னை
600 005
நில நிர்வாகத் துறை

சுருக்கம்

நீர்வள ஆதாரத் துறை – நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து ஏரிகள், நீர்நிலைகள், மீன்பாசி குத்தகை வருமானத்தை நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு பகிர்ந்தளித்தல் – மீன்பாசி குத்தகை வருவாய் செலுத்துதல் புதிய கணக்குத் தலைப்பு வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

பொதுப்பணி(டபிள்யூ.2)துறை

013923

அரசாணை (நிலை) எண்.72

நாள் 06.05.2014

ஜெய சித்திரை 23,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண் 16, பொதுப்பணித் (டபிள்யூ2) துறை நாள் 14.01.2011.

மேலும் படிக்க:–

2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை கடித எண்.ப.பா.மே.கு/உ.பொ.3/2012/கோ.36 நாள் 30.05.2012. 13.12.2012, 25.07.2013 மற்றும் 06.09.2013.

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அணைகள், கண்மாய்கள், ஏரிகள் மற்றும் இதர நீர்நிலைகளின் கரையை பலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் கலிங்கு, மதகு மற்றும் பாசன அமைப்பு கட்டுமான அமைப்புகளின் பராமரிப்பு பணிகளுக்காக நிதி ஆதாரம் தேவைப்படுவதால், மீன்வளத்துறை மற்றும் வருவாய்த்துறையினரால் விடப்படும் மீன்பாசி ஏலத்தொகையிலிருந்து 50% விழுக்காடு (ஐம்பது விழுக்காடு) ஐ பொதுப்பணித் துறை, நீர் ஆதாரத் துறைக்கு, அத்துறைகள் வழங்க வேண்டும் என்றும், பொதுப்பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகளில் அரசு உத்தரவு இல்லாமல் மீன்பாசி ஏல உரிமைகளை பயன்படுத்தி வரும் அமைப்புகள் மற்றும் தனிநபர் மீன்பாசி ஏலத்தை நடத்துவதற்கு தடை விதித்தும், தமிழ்நாடு விவவாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை

Verified RealEstate

மேலாண்மைச் சட்டம் 2000ன்படி சட்ட ரீதியாக விவசாயிகள் அமைப்புக்கு பராமரிப்பு பணிக்காக மீன்பாசி குத்தகைத் தொகையிலிருந்து ஒரு பகுதியை அளிக்கும் பொருட்டு இந்த ஏரிகளில் மீன்பாசி ஏலம் விடும் அதிகாரத்தினை பொதுப்பணித் துறைக்கு வழங்க வேண்டும் என்றும், இத்தகைய வருமானத்தில் 50% விழுக்காடு தொகையினை விவசாயிகள் அமைப்பின் மூன்று நிலையிலான (சங்கங்களுக்கு) அடுக்குகளுக்கும்

அ). நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம்
(முதல் நிலை) – 60 விழுக்காடு
ஆ). பகிர்மானக் குழு (இரண்டாம் நிலை – 20 விழுக்காடு மற்றும்
இ). திட்டக்குழு (மூன்றாம் நிலை) – 20 விழுக்காடு விகிதத்தில் பகிர்ந்து அளித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை அவர்கள் மேற்குறிப்பிட்ட அரசாணையை நடைமுறைபடுத்த மீன்பாசி குத்தகையில் 50% விழுக்காடு வருமானத்தை செலுத்துவதற்குரிய வருவாய் கணக்கு குறித்து அரசு ஆணையில் தெரிவிக்கப்படவில்லை எனவும் மீன்பாசி ஏலம் விடுவதால் கிடைக்கும் வருவாயினை பகிர்ந்தளிக்க புதிய பொது கணக்குத் தலைப்பு தேவைப்படுகிறது எனவும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, ஏற்று, அதன்படி நீர்வள ஆதாரத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து ஏரிகள், நீர்நிலைகளில், மீன்பாசி ஏலம் விடுவதால் கிடைக்கும் குத்தகை வருமானத்தை நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கும் பொருட்டு மீன்பாசி குத்தகை வருவாய் செலுத்துவதற்கு கோரிக்கை எண்.60, கீழ் புதிய கணக்குத் தலைப்பு தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது. கணக்குத் தலைப்பு பின்வருமாறு :–

0701 –பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்கள் – 80 பொது – 800 ஏனைய வரவுகள் – AK - மீன்பாசி குத்தகை மூலம் வரும் வருமானம்
(த.தொ.கு.0701– 80–800– AK–0000)

4. முதன்மைத் தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதாரத் துறை) அவர்கள் மேற்கண்ட கணக்கு தலைப்பிற்கு கணக்கு நேரமைப்பு, மதிப்பீடு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

Verified by RealEstate TM

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 328/PWII/14, நாள் 01.02.2014 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.சாய்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை,
(மதுரை மண்டலம், திருச்சி மண்டலம்,
கோயமுத்தூர் மண்டலம், சென்னை மண்டலம்)
தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்)
நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர், (இயக்கம் மற்றும் பராமரிப்பு) நீர்வள ஆதாரத்துறை,
சென்னை – 5.
முதன்மை கணக்காய்வு தலைவர் (A&E), சென்னை–18.
முதன்மை கணக்காய்வு தலைவர் (Audit-I), சென்னை–18.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை – 5
இயக்குநர், மீன்வளத்துறை, தேனாம்பேட்டை, சென்னை –6.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மை செயலாளர்,
தலைமைச்செயலகம், சென்னை 9.
மாண்புமிகு (நிதி மற்றும் பொதுப்பணி) அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், தலைமைச்செயலகம், சென்னை – 9.
வருவாய்த்துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9.
கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9.
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதி (ப.செ.பொது-II /பொதுப்பணி-II) த்துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9.
இ.கோ./ உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
6/5/14

Verified by RealEstate ™